# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் –
## வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்பங்கள்

**மூளைக் காயத்துக்கான மறுவாழ்வு அணி**

### 1. இந்தச் சூழ்நிலையில் நான் என்ன எதிர்பார்க்க முடியும்?

வாடிக்கையாளர்கள், குடும்பங்கள், பணியாளர்கள் மற்றும் நர்ஸிங் மூலமாக இரண்டு பக்கங்களிலிருந்தும் பரஸ்பர மரியாதை நிலவும் சூழலை உங்கள் குடும்பம் எதிர்பார்க்கலாம். பரஸ்பரம் ஒருவரோடு ஒருவர் தொடர்பில் இருந்து ஊக்கமளிக்கும் சூழலை வாடிக்கையாளர்களும் குடும்பங்களும் எதிர்பார்க்கலாம். ஊழியர்களும் குடும்பங்களும் ஒன்று சேர்ந்து உருவாக்கி பராமரிக்கும் சுத்தமான சூழலை குடும்பங்கள் எதிர்பார்க்க முடியும்.

### 2. என்னுடைய குழந்தை அதன் தினசரி பழக்க வழக்கங்களுக்கு எப்பொழுது திரும்பும்?

நமது வாடிக்கையாளர்கள் அனைவரும் முடிந்தவரை தற்சார்பு உள்ளவர்களாக இருக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். பகல்நேர கவனிப்பு (பல் துலக்குதல், மருத்துவமனை ஆடைகளுக்குப் பதிலாக சொந்த ஆடைகளை அணிதல்), பள்ளிக்குச் செல்லுதல், பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அவர்களுடைய திறனறிந்து பணிகளைக் கற்றுக்கொடுத்தல் போன்றவை தற்சார்பு உதாரணங்கள் ஆகும்.

### 3. என்னுடைய குழந்தையின் மறுவாழ்வில் நானும் ஈடுபட்டிருக்க என்ன செய்ய வேண்டும்?

பெற்றோர் அல்லது பாதுகாவளரின் பணி ஈடுபாடுகள் மற்றும் நேர ஒதுக்கீட்டை அனுசரித்து, குடும்பத்தில் சிலர் எங்கள் வாடிக்கையாளருக்கு நேரம் கிடைக்கும் சமயங்களில் வந்து சந்திக்கலாம் அல்லது அவர் படுக்கை அருகில் இருக்கலாம். வலியைச் சமாளித்தல், புரட்டி படுக்க வைத்தல், ஆடைகளை மாற்றி அணிவித்தல் போன்ற வாடிக்கையாளர்களின் அன்றாட நடவடிக்கைகளை குடும்ப உறுப்பினர்களும் தெரிந்துகொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர்.

### 4. நான் எனக்கென்று ஒரு தனி அறையைப் பெற முடியுமா?

தனி அறை கிடைப்பது பல காரணிகளைச் சார்ந்திருக்கும். உதாரணமாக: வாடிக்கையாளர் பாதுகாப்பு, மருத்துவப் பிரச்சனைகள், ஆகியவை.

### 5. அழைப்பு மணியை அழுத்திய பிறகு நான் எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டியிருக்கும்?

ஒரு வாடிக்கையாளர் அவருடைய அழைப்பு மணியை ஒலித்து அழைத்ததும் அந்தப் பிரிவிலுள்ள செவிலியர் ஒருவர் பதில் என்னவென்று சென்று பார்ப்பார். உங்கள் செவிலியர் அல்லது வேறு பணியில் ஈடுபட்டிருக்காத செவிலியர் ஒருவர் தாமதம் செய்யாமல் வாடிக்கையாளரைச் சென்று பார்ப்பார்.

**Holland Bloorview Kids Rehabilitation Hospital**
150 Kilgour Road, Toronto, ON M4G 1R8
**பதாளைகபசி**: 416-425-6220 **கட்ைணமில்ைாளைஇவசஅளழப்பு**: 800-363-2440
**பதாளைநகல்**: 416-425-6591 **மின்னஞ்சல்**: info@hollandbloorview.ca
www.hollandbloorview.ca

Holland Bloorview
Kids Rehabilitation Hospital

6. **எந்தெந்த நாட்களில் குளிக்க வேண்டும்**?

வாடிக்கையாளர் குளிக்கும் நாட்கள் வழக்கமாக வாரத்துக்கு மூன்று நாட்கள் ஆகும், அவை வாடிக்கையாளர் குளத்துக்குச் சென்று வரும் நாட்களை ஒத்திருக்கும். குடும்ப உறுப்பினர்கள் விரும்பினால் மற்ற நாட்களிலும் அவரைக் குளிப்பாட்டலாம். வாடிக்கையாளர் தங்கியிருக்கும் காலத்திற்குத் தேவைப்படும் சுகாதாரப் பொருள்கள் மற்றும் ஆடைகளை குடும்பத்தினர் அளிக்க வேண்டும். வாடிக்கையாளரின் ஆடைகளைத் துவைத்து சுத்தம் செய்து வைப்பது குடும்பத்தினரின் பொறுப்பாக இருக்கும் (அதற்காக இந்தப் பிரிவில் ஒரு சலவை அறை இருக்கிறது).

7. **என்னுடைய குழந்தையை அதன் மருத்துவமனைச் சந்திப்புகளுக்கு யார் அழைத்துச் செல்வார்கள்**?

முன்கூட்டியே நேரம் ஒதுக்கப்பட்ட ஆர்தோடிக்ஸ், பல், உள்ளிருக்கும் கிளினிக்குகளுக்கும், தொடர் கவனிப்புக்காக வெளியிலுள்ள அலுவலகங்களில் நேரம் ஒதுக்கப்பட்டிருக்கும் சமயங்களிலும், வாடிக்கையாளரை அவர் பாதுகாவலர் தான் அழைத்துச்செல்ல வேண்டும். பிசியோதெரபி மற்றும் தொழில்சார்ந்த சிகிச்சை ஆகியவை மேற்கொள்ளப்படும்போது பெற்றோர்கள் உடன் இருக்க வேண்டுமா இல்லையா என்று அவர்களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்படும்.

8. **நான் அருகில் இருக்க இயலாத சமத்தில் படுக்கைக்கு அருகில் உடன்பிறந்தவரை இருக்கச் செய்யலாமா**?

இளவல் ஒருவருக்குத் துணையாக படுக்கைக்கு அருகில் இருக்கும் உடன்பிறந்தவர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் 16 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும். இரவு முழுவதும் ஒரு குடும்ப உறுப்பினர் மட்டுமே படுக்கைக்கு அருகில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார்

9. **அந்தப் பிரிவில் விளக்குகள் எத்தனை மணிக்கு அணைக்கப்படுகின்றன**?

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும், இரவு 10 மணிக்கு (2200 மணி) செவிலியர் விளக்கை அணைத்துவிடுவார். வயதான வாடிக்கையாளர்கள் தங்களுடைய அறையில் உள்ள படுக்கையில் இரவு 11 மணி (23.00 மணி) வரை விழித்திருக்கலாம்.

10. **மருத்துவமனையில் வழக்கமான இரவு நேர நடைமுறைகள் எப்படி இருக்கும்**?

இரவு நேரத்தில் செவிலியர்கள் பிரிவு முழுவதும் சுற்றிவந்து வாடிக்கையாளர்களிடம் ஒரு மணிநேரத்துக்கு ஒரு முறை பாதுகாப்புப் பரிசோதனைகளை மேற்கொள்வார்கள். இரவு நேரத்தில் ஒரு மணிநேரத்துக்கு ஒரு முறை பாதுகாப்புப் பரிசோதனைகளைச் செய்வது ஒவ்வொரு வாடிக்கையாளரின் பாதுகாப்பை உறுதி செய்கிறது என்பதால் இது கட்டாயமாக மேற்கொள்ளப்படுகிறது. இரவுச் செவிலியர்கள் இவற்றையும் மேற்கொள்வார்கள் (தேவைப்பட்டால்): வாடிக்கையாளர்களுக்கு ஆடை மாற்றுதல், திருப்பிப் படுக்க வைத்தல், உணவளித்தல் மற்றும் மருந்து கொடுத்தல்.

**Holland Bloorview Kids Rehabilitation Hospital**
150 Kilgour Road, Toronto, ON M4G 1R8
**பதாளைகபசி:** 416-425-6220 **கட்டைணமில்லைாளைஇவசஅளழப்பு:** 800-363-2440
**பதாளைநகல்:** 416-425-6591 **மின்னஞ்சல்:** info@hollandbloorview.ca
www.hollandbloorview.ca

Holland Bloorview
Kids Rehabilitation Hospital

## 12. Weekend Pass (**வாரக்கடைசி அனுமதிச்சீட்டு**) (WP): **நான் எப்பொழுது செல்ல வேண்டும் / எந்த நேரத்தில் திரும்பி வரவேண்டும்**?

Weekend Pass (வாரக்கடைசி அனுமதிச்சீட்டு) பெற்று வாடிக்கையாளர் வெளியில் சென்று வர மருத்துவக் குழு அனுமதித்திருக்கும் சமயங்களில், குடும்பத்தினர் அவரை வீட்டிற்கு அழைத்துன் செல்லலாம். நகரத்துக்கு வெளியிலிருக்கும் குடும்பத்தினருடன் / நண்பர்களுடன் / ஹோட்டலில் தங்குவதற்கு குடும்பங்கள் ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்பதால் மருத்துவமனையிலிருந்து வெளியே இருப்பதை மட்டுமே இது குறிக்கிறது. வாடிக்கையாளரின் சிகிச்சைத் திட்டம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக Weekend Pass (வாரக்கடைசி அனுமதிச்சீட்டு)கள் ஒரு சமயத்தில் இரண்டு இரவுகளுக்கு மட்டுமே (வழக்கமாக வாரக்கடைசி நாட்களுக்கு) வழங்கப்படுகின்றன.  வாடிக்கையாளர்கள் படுக்கை நேரத்திற்கு முன்னர் அவருடைய கவனிப்புத் தேவைகள் அனைத்தையும் முடிக்கும் விதமாக, குடும்பங்கள் ஞாயிறு இரவு 8 மணிக்கு (20.00 மணி) அல்லது அதற்கு முன்னதாக WP யிலிருந்து திரும்பிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.  முன்கூட்டியே திரும்புவதால் வாடிக்கையாளர் தன்னுடைய வேலைகளை முடித்து ஒய்வு எடுத்துக்கொண்டு திங்கட்கிழமை காலையில் தயாராக இருக்க உதவும்.  அதோடு, முன்கூட்டியே திரும்புவதால் அறையில் தூங்கிக்கொண்டிருக்கும் மற்றவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளையும் குறைக்கும்.

| **நோயுற்ற குழந்தைகள்** | Holland Bloorview (**ஹாலந்து ப்ளூர்வியூ**) |
|---|---|
| ❖ பெரும்பாலான அறைகள் தனி அறைகள் ஆகும் | ❖ பெரும்பாலான அறைகள் இரண்டு பேர் தங்கக்கூடியவைகளாகவும், சில அறைகள் தனி அறைகளாகவும் உள்ளன |
| ❖ உணவுகள் ஒரு மெனுவிலிருந்து தேர்ந்தெடுத்து ஆர்டர் செய்து நோயாளியின் அறையிலேசே சாப்பிடப்படும். | ❖ லவுஞ்சில் பரிமாறப்பட்டுச் சாப்பிடுவதற்கு பல வகை உணவுகள் மெனுவில் சேர்க்கப்பட்டுள்ளன. |
| ❖ மருத்துவமனையில் தங்கியிருக்கும்போது பள்ளிக்குச் செல்ல வேண்டியதில்லை | ❖ சிகிச்சை முடிந்து மீண்டும் சமூக வாழ்க்கையில் இணைந்திருக்க உதவும் வகையில், வாடிக்கையாளர்கள் அனைவரும் மறுவாழ்வு மையத்தில் இருக்கும் காலத்தில் பள்ளிக்குச் சென்றுவர வேண்டும். |
| ❖ செவிலியர் வாடிக்கையாளர் விகிதம் நோயாளியின் சிரமம் மற்றும் மருத்துவ தேவைகளைச் சார்ந்திருக்கும் - பெரும்பாலான நோயாளிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். | ❖ செவிலியர் வாடிக்கையாளர் விகிதம் நோயாளியின் சிரமம் மற்றும் மருத்துவ தேவைகளைச் சார்ந்திருக்கும் - பெரும்பாலான நோயாளிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். |
| ❖ மருத்துவர் – வாடிக்கையாளரை அடிக்கடி அடிக்கடி கவனித்து பார்த்துக் கொள்கிறார் | ❖ இரண்டு பகுதி நேர மருத்துவர்கள், ஒரு பயிற்சிச் செவிலியர், அழைக்கப்படும் நேரத்தில் கூடுதலான மருத்துவர்கள் |

**Holland Bloorview Kids Rehabilitation Hospital**
150 Kilgour Road, Toronto, ON   M4G 1R8
**பதாளைகபசி**: 416-425-6220    **கட்ைணமில்ைாதைஇவசஅளழப்பு**: 800-363-2440
**பதாளைநகல்**: 416-425-6591    **மின்னஞ்சல்**: info@hollandbloorview.ca

www.hollandbloorview.ca

Holland Bloorview
Kids Rehabilitation Hospital